## மாகாண வீதிகள் செயற்திட்டம் - (கிழக்கு மாகாணம்) 2012

### 1. அபிப்பிராயம்

எனது ஆய்வின் மூலம் தென்படுவதும் எனக்குக் கிடைக்கப்பெற்ற சிறந்த தகவல்கள் மற்றும் எனக்கு வழங்கப்பட்ட விளக்கங்களுக்கு அமைய,

(அ) செயற்திட்டமானது 2012 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்காக முறையான கணக்கேடுகளை பேணியிருந்ததுடன் நிதிக்கூற்றுக்களானவை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களிற்கிணங்க 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான செயற்திட்டத்தின் நிலைவரத்தை உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் காட்டுகின்றன என்றும்,

(ஆ) ஏற்பாடு செய்யப்பட்ட நிதிகள் அவை ஏற்பாடு செய்யப்பட்ட நோக்கங்களுக்காகவே பயன்படுத்தப்பட்டிருந்தன என்றும்,

(இ) 2012 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டின் போதான விசேட (டொலர்) கணக்கிலிருந்தான பற்றுதல்களும் அதற்கான மீள் நிரப்பல்களும் செயற்திட்டத்தால் பேணப்பட்ட ஏடுகள் மற்றும் பதிவேடுகளில் உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் வெளிப்படுத்தப் பட்டிருந்ததுடன் 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி அத்திகதியிலிலுள்ளவாறான இலங்கை மத்திய வங்கியின் கணக்கீட்டுப் பதிவேடுகளுடன் திருப்திகரமாக இணக்கம் செய்யப்பட்டிருந்தது என்றும்

(ஈ) சமர்ப்பிக்கப்பட்ட செலவினக் கூற்றுக்களானவை (எஸ்ஓஈஎஸ்) கடன் உடன்படிக்கைகளில் குறித்துரைக்கப்பட்ட வேண்டுகைகளுக்கிணங்க மீளளிப்புக்களுக்கான விண்ணப்பங்களுக்கு ஆதாரமானவை என நியாயபூர்வமாக நம்பிக்கை கொள்ள முடியுமென்றும்,

(உ) எனது முன்னைய ஆண்டு கணக்காய்வு அறிக்கையில் குறிப்படப்பட்ட விடயங்களை திருத்துவதற்கு முகாமைத்துவத்தால் திருப்திகரமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தன என்றும்,

(ஊ) கடன் உடன்படிக்கைகளில் குறித்துரைக்கப்பட்ட நிதி உடன்பாடுகள் பின்பற்றப்பட்டிருந்தன என்றும்,

நான் அபிப்பிராயப்படுகின்றேன்.

## 2. நிதிசார் கூற்றுக்கள்

### 2.1 நிதிசார் செயலாற்றல்

கணக்காய்விற்காக பெற்றுக்கொள்ளப்பட்ட நிதிக் கூற்றுக்கள் மற்றும் தகவல்களின்படி, மீளாய்வாண்டிற்கான செயற்திட்ட செலவினம் ரூபா 510,550,187 ஆனதுடன் 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான திரண்ட செலவினம் ரூபா 780,938,817 ஆகும். மீளாய்வாண்டிற்கான செலவினம், முன்னைய ஆண்டிற்கான செலவினம் மற்றும் 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான திரண்ட செலவினம் என்பவற்றின் பொழிப்பு பின்வரும் கூற்றில் காட்டப்படுகின்றது.

| **செலவின வகை** | **திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான செலவினம்** | | **2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான திரண்ட செலவினம்** |
|---|---|---|---|
| | **2012** | **2011** | |
| | ரூபா | ரூபா | ரூபா |
| சிவில் வேலைகள் | 445,332,808 | 216,903,023 | 662,235,831 |
| தளபாளங்களும் பொருத்திகளும் | - | 850,700 | 850,700 |
| அலுவலக உபகரணங்கள் | 2,290,312 | 496,616 | 2,786,928 |
| ஆலோசனை சேவைகள் | 57,980,410 | 41,174,136 | 99,154,546 |
| அதிகரிக்கும் மற்றும் செயற்பாட்டுக் கிரயம் | 10,381,702 | 17,100,254 | 27,481,956 |
| மீள்மதிப்பீடு மற்றும் பெறுமதி குறைப்புக் கணக்கு | (5,435,045) | (6,136,099) | (11,571,144) |
| மொத்தம் | **510,550,187** | **270,388,630** | **780,938,817** |

## 2.2 விசேட (டொலர்) கணக்கு

நிதிக்கூற்றுக்கள் மற்றும் கிடைக்கப் பெற்ற தவல்களின்படி, மீளாய்வாண்டின் போதான செற்திட்டத்தின் விசேட (டொலர்) கணக்கின் செயற்பாடுகள் கீழே பொழிப்பாக்கப்பட்டுள்ளன.

| விபரங்கள் | யூஎஸ்டொலர் | ரூபா |
|---|---|---|
| 2012 சனவரி 01 இல் உள்ளவாறான மீதி | 359,654 | 40,965,051 |
| கூட்டு: மீள்நிரப்பல்கள் | 4,786,895 | 624,581,664 |
| | 5,146,549 | 665,546,715 |
| கழி:- பற்றுதல்கள் (எவ்ஏ) | (3,829,833) | (497,277,408) |
| பற்றுதல்கள் (ஆர்எவ்ஏ) | (144,185) | (18,300,616) |
| வெளிநாட்டு நாணயமாற்று நட்டம் | - | (868,835) |
| 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி | 1,172,531 | 149,099,856 |

## 3. நிதிசார் மற்றும் பௌதீக செயலாற்றல்

### 3.1 நிதிகளின் பயன்பாடு

திரட்டு நிதியம், மீளளிக்கக்கூடிய வெளிநாட்டு உதவி மற்றும் வெளிநாட்டு உதவிகளின் கீழ் மீளாய்வாண்டிற்காக இலங்கை அரசாங்கத்தின் வருடாந்த மதிப்பீடுகளில் செயற்திட்டத்திற்காக செய்யப்பட்ட நிதியேற்பாடு முறையே ரூபா 5,000,000, ரூபா 23,000,000 மற்றும் ரூபா 500,000,000 ஆகும். மீளாய்வாண்டின் போதான மொத்த நிதியேற்பாடு, உள்ளபடியான செலவினம் மற்றும் நிதிகளின் பயன்பாட்டின் சதவீதம் என்பன கீழே தரப்படுகின்றன.

| | மொத்த தேறிய ஏற்பாடு | உள்ளபடியான செலவினம் | பயன்பாட்டின் சதவீதம் |
|---|---|---|---|
| | ரூபா | ரூபா | % |
| திரட்டு நிதியம் | 5,000,000 | 2,224,612 | 44 |
| மீளளிக்கக்கூடிய | 23,000,000 | 18,300,616 | 80 |

| | | | |
|---|---|---|---|
| வெளிநாட்டு உதவி | | | |
| வெளிநாட்டு உதவி | 500,000,000 | 497,377,408* | 99 |
| | **528,000,000** | 517,902,636* | **98** |

* மீளாய்வாண்டின் போது வெளிநாட்டு உதவியின் கீழ் உள்ளபடியான செலவினத்தில் ரூபா 5,435,046 தொகையான வெளிநாட்டு நாணயமாற்று இலாபம் உள்ளடக்கப்பட்டிருந்தது.

## 3.2 நிர்மாண வேலைகளின் செயல்முன்னேற்றம்

கணக்காய்விற்கு கிடைக்கப்பெற்ற செயல்முன்னேற்ற அறிக்கையின்படி, 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான செயற்திட்டத்தின் செயல்முன்னேற்றம் கீழே காட்டப்பட்டுள்ளது.

| பொதி இலக்கம் | வீதியின் நீளம் | மொத்த ஒப்பந்த பெறுமதி | ஆரம்பித்தல் திகதி | பூர்த்தியாக்கல் திகதி | 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான முன்னேற்றம் | |
|---|---|---|---|---|---|---|
| | கி.மீ | ரூபா | | | நிதி % | பௌதீகம் % |
| ஈபி 01 | 09.55 | 445,646,012 | 22.08.2011 | 21.02.2013 | 34 | 64 |
| ஈபி 02 | 09.00 | 403,416,891 | 23.04.2011 | 23.04.2013 | 42 | 66 |
| ஈபி 04 | 23.00 | 499,139,693 | 23.08.2011 | 21.02.2013 | 50 | 75 |
| ஈபி 05 | 9.60 | 411,364,269 | 23.05.2012 | 22.11.2013 | 22 | 20 |
| | **51.15** | **1,759,566,865** | | | | |

**3.3** ஒப்பந்த உடன்படிக்கை மற்றும் பின்னர் வழங்கப்பட்ட கால நீடிப்பு என்பவற்றின்படி, பின்வரும் வேலைகளின் வேலைப் பூர்த்தியாக்கலிற்காக திகதிகள் நிர்ணயிக்கப்பட்டிருந்தன. எவ்வறாயினும், 2013 யூன் 10 இல் செய்யப்பட்ட பௌதீக மெய்மையாய்வில் கீழே காட்டப்பட்ட விபரங்களின்படி வேலைகள் பூர்த்தியாக்கப்பட்டிருக்கவில்லை.

| ஒப்பந்தப் பொதி | பூர்தியாக்கல் திகதி | நீடிப்புத் திகதி | 2013 யூன் 10 இல் உள்ளவாறான பூர்த்தியாக்கல் சதவீதம் |
|---|---|---|---|
| ஈபி -01 | 02.02.2013 | 02.06.2013 | 91% |
| ஈபி -02 | 23.04.2013 | 21.05.2013 | 90% |
| ஈபி -04 | 21.02.2013 | 29.05.2013 | 94% |

## 4. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

பின்வரும் கட்டுப்பாட்டுப் பகுதிகள் தொடர்பில் விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) கணக்கீட்டுப் பதிவேடுகளின் பராமரிப்பு
(ஆ) கொள்வனவு
(இ) வரிக் கொடுப்பனவுகள்